**வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மீளமைப்பதற்கான கலவரத்திற்குப் பிந்திய அவசர உதவிச் செயற்திட்டம் - 2014**

---

வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மீளமைப்பதற்கான கலவரத்திற்குப் பிந்திய அவசர உதவிச் செயற்திட்டத்தின் 2014 பெப்ரவரி 28 இல் முடிவடைந்த இரண்டு மாதக் காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 செப்தெம்பர் 27 ஆந் திகதிய ஜேஎவ்பிஆர்-9150-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 11(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

மானிய உடன்படிக்கையின் படி, முன்னர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சாக காணப்பட்ட கொள்கை திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக காணப்படுவதுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டச் செயலகங்கள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளனர். தற்காலிகமான வருமானம் சம்பாதிக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் ஊடாக வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மீளமைத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஐ.அ.டொ. 2.79 மில்லியன் ஆனதுடன் அதில் ஐ.அ.டொ. 2.5 மில்லியன் அல்லது மொத்தக் கிரயத்தில் 89 சதவீதத்தை நிதியளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித் தொகையான முறையே ஐ.அ.டொ. 0.15 மில்லியன் மற்றும் ஐ.அ.டொ. 0.14 மில்லியன் தொகைகள் இலங்கை அரசாங்கத்தினாலும் செயற்திட்டச் செயற்பாடுகளில் பங்குபற்றும் சமூகங்களாலும் பங்களிப்புச் செய்யப்படுகின்றது. செயற்திட்டச் செயற்பாடுகள் 2011 மே 01 ஆந் திகதி தொடங்கப்பட்டிருந்ததுடன் 2013 யூலை 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, செயற்திட்டத்தின் முடிவுறுத்தும் காலம் 2014 பெப்ரவரி 28 வரை காலநீடிப்புச் செய்யப்பட்டது.

## 1.3 செயற்திட்டச் செயற்பாடுகள்

மானிய உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் கீழுள்ளவாறு பொழிப்பாக்கப்படுகின்றது.

- கூறு ஏ: இடங்களிலுள்ள நீர்ப்பாசனக் கால்வாய்கள் மற்றும் கிராமிய நுழைவு வீதிகளை புனரமைத்து பராமரித்தல்.
- கூறு பீ: சுய தொழிலுக்கான திறன்களை அபிவிருத்தி செய்தலும் விவசாய உற்பத்தித் திறனை அபிவிருத்தி செய்தலும்
- கூறு சீ: செயற்திட்ட நிர்வாகம், அமுலாக்கல் உதவி, கண்காணித்தல் மற்றும் கணக்காய்வு செய்தல்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

--------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.5 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலவினங்கள் மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகளுடனும் செயற்திட்டத்தினால் பராமரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளுடனும் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் மானியம் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து

செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 பெப்ரவரி 28 இல் முடிவடைந்த இரண்டு மாத காலத்திற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2014 பெப்ரவரி 28 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக அபிவிருத்திக் மானிய உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான ரூபா 343,035 தொகை மேலதிக கொடுப்பனவு நிதிக்கூற்றுக்களில் தொங்கல் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற முறையே ரூபா 9,047,298 மற்றும் ரூபா 742,924 தொகையான செலுத்த வேண்டியவைகளும் பெறவேண்டியவைகளும் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 25,470,000 கிரயத்தில் 2014 சனவரியில் கொள்வனவு செய்யப்பட்ட ஆறு அறுவடை இயந்திரங்கள் நலனாளிகளிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பட்டியல் விபரங்கள் கிடைத்திருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முல்லைதீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் செயற்திட்டத்தினால் வாழ்வாதார மீளமைத்தல் செயற்பாடுகளின் கீழ் ரூபா 29,377,755 பெறுமதியான கருவிகளும் உபகரணங்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அச் சொத்துக்களின் கொள்வனவுக்கான கேள்விதாரர்கள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) செயற்திட்டத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், 05 மாவட்ட அலுவலகங்களின் நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் வருடாந்த மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, ரூபா 5,100,789 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களிற்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 29,377,755 பெறுமதியான கருவிகளின் உள்ள தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

(இ) அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு, செயற்திட்டக் கால முடிவிலுள்ள காசு மற்றும் வங்கி மீதிகள் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும். ரூபா 1,020,436 கூட்டுத்தொகையான 2014 பெப்ரவரி 28 இல் உள்ளவாறான காசு மற்றும் வங்கி மீதிகள் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 பெப்ரவரி 28 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு ஏற்பாடுகள் | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | 2014 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு பயன்பாடு | |
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஏடிபீ | 2.50 | 320.90 | 55.00 | 27.87 | 2.44 | 320.26 |
| ஜீஓஎஸ்எல் | 0.15 | 19.20 | 1.50 | 0.38 | 0.04 | 5.70 |
| சமூக பங்களிப்பு | 0.14 | - | - | - | - | - |
| **மொத்தம்** | **2.79** | **340.10** | **56.50** | **28.25** | **2.48** | **325.96** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட நிர்வாக ஞாபனத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் தலைமையில் செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழுவொன்று மாதந்தோறும் நடாத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழு செயற்திட்டக் காலத்தில் தாபிக்கப்படாதிருந்தமையால்

செயற்திட்டச் செயற்பாடுகளை பயனுள்ள விதத்தில் கண்காணிக்க முடிந்திருக்கவில்லை.

(ஆ) அடையப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளிற்குரிய பாதீட்டு ஒதுக்கீடுகளுடன் பிரதான பதவியணியினரின் பொறுப்புக்களை இனங்காண்பதற்குத் தேவையான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நிச்சயிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்குத் தேவையான மாற்றங்களை செய்வதற்கும் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தமான செயன்முன்னேற்றத்தை பொருத்தமாக மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது.

(இ) கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களின் படி, 2014 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு கள நீர்ப்பாசன வாய்க்கால்களை புனரமைத்தலின் செயன்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| மாவட்டம் | கள நீர்ப்பாசன வாய்க்கால்கள் | | | |
|---|---|---|---|---|
| | இலக்கு | பூரணப்படுத்தப்பட்டவை | நடைமுறையிலுள்ளவை | மொத்தம் |
| | (கி.மீ) | (கி.மீ) | (கி.மீ) | (கி.மீ) |
| யாழ்ப்பாணம் | 40 | 17.41 | - | 17.41 |
| கிளிநொச்சி | 40 | - | 22.5 | 22.5 |
| முல்லைதீவு | 40 | - | 7.25 | 7.25 |
| மன்னார் | 40 | 18.90 | - | 18.90 |
| வவுனியா | 40 | - | 23.58 | 23.58 |
| மொத்தம் | 200 | 36.31 | 53.33 | 89.64 |

மேற்படி தகவல்களின் படி, செயற்திட்டக் காலத்தில் புனரமைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த 200 கிலோ மீற்றர்களில் 36.31 கிலோ மீற்றர் கள நீர்ப்பாசனக் கால்வாய்கள் மாத்திரம் செயற்திட்டக் காலத்தில் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) செயற்திட்டக் காலத்தின் போது 100 கிலோ மீற்றர் கிராமிய நுழைவு வீதிகளை மேம்படுத்துவதற்கு செயற்திட்டம் இலக்கிட்டிருந்ததுடன் 2014 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு அவற்றில் 28.98 கிலோமீற்றர் கிராமிய நுழைவு வீதிகளின் வேலைகள் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், உள்வாரியாக இடம்பெயர்ந்த ஆகக்குறைந்தது 2,000 ஆட்களுக்கேனும் சுய தொழிலிற்கான திறன் அபிவிருத்தி பயிற்சியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதில் 1758 உள்வாரியாக இடம்பெயர்ந்த ஆட்களிற்கு மாத்திரம் 2014 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.3 அசாதாரண செயற்பாடுகள்

ரூபா 1,137,768 கிரயத்தில் 10 மேசை கணனிகள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வளவில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 செயற்திட்டச் செயற்பாடுகளை மூடிவிடுதல்

செயற்திட்டச் செயற்பாடுகள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதியன்று முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் சொத்துக்களை தொடர்புடைய முகவர்களிற்கு கையளிப்பதற்கும் செயற்திட்டத்தின் கலைத்தல் கணக்கை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.